தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு 2012

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 5

நேரம்: 150 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 15 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) கீறிட்ட இடங்களில் பொருத்தமான விடையைத் தேர்ந்து எழுதுக.**

1. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துகளின் எண்ணிக்கை

   ______________________.

   (216, 247, 30)

2. வயலும் வயல் சார்ந்த இடமும் ______________________ எனப்படும்.

   (நெய்தல், மருதம், முல்லை)

3. ஈரூடக உயிரிகளில் ஒன்று ______________________.

   (சுறா, முதலை, எறும்பு)

4. கால் + சங்கிலி என்பதைச் சேர்த்து எழுதினால்

   ______________________.

   (காற்சங்கிலி, கால்சங்கிலி, கால்ச்சங்கிலி)

5. எம் இனத்தின் பெருமைக்குச் சான்று ______________________.

   (பிறந்தநாள், ஆண்டுவிழா, தைப்பொங்கல்)

6. கதிரவன் காலித்தான். இதில் காலித்தல் என்பது

   ______________________.

   (மறைதல், தேய்தல், எழுதல்)

7. தமிழர்களின் அறநூல்களுள் மிகச் சிறந்தது

   ______________________.

   (புறநானூறு, அகநானூறு, திருக்குறள்)

8. பண்டைக்காலத்தில் நடம், நட்டம் என அழைக்கப்பட்ட கலை

   ______________________.

   ( ஓவியக்கலை, நடனக்கலை, சிற்பக்கலை)

9. தன் இனத்தை அழைத்துக் கூடி உண்ணும் பறவை

______________________.

(காகம், கிளி, மயில்)

10 ______________________ நேற்றுப் பூங்காவிற்குச் சென்றீர்கள்.

(நாங்கள், அவர்கள், நீங்கள்)

11. ஆடற்குலப் பெண்கள் ____________________ என அழைக்கப்பட்டனர்.

(கூத்தர், பாணர், விறலியர்)

12. குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வம் __________________.

(முருகன், மாயோன், இந்திரன்)

13. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன

_________________________.

(ஐம்பூதம், ஐந்திலக்கணம், ஐம்பால்)

14. கூடி வாழ்ந்தால் _______________________ நன்மை.

( கோடி, கொடி, கேடி)

15. மன்னார் மாவட்டத்திற்கு வளம் சுரக்கும் நீரேரி ______________________

(வவுனிக்குளம், கட்டுக்கரைக்குளம், மாங்குளம்)

16. காடுபடு செல்வங்களுள் ஒன்று ____________________________.

(அரிசி, குதிரை, தேன்)

17. நாய் குரைக்கும். அது போல புலி _______________________.

(உறுமும், கனைக்கும், முழங்கும்)

18. கடல் முழுவதும் சென்று வணிகம் செய்தவர்கள்

_______________.

(சேரர், சோழர், பாண்டியர்)

19. வேழனால் நேற்றுப் பாடல் _______________.

(பாடப்பட்டது, பாடினான், பாடுவான்)

20 விரைவு, வலிவு, உயர்வு ஆகிய முத்திற நோக்கில் விளையாடப்படும் விளையாட்டு _______________.

(கிளித்தட்டு, கிட்டிப்புள்ளு, ஒலிம்பிக்)

21. வானுறையும் தெய்வம் எனப் போற்றப்படுபவன்_______________.

(அரசன், சந்திரன், கதிரவன்)

22. மாறனின் கையெழுத்து _______________ ஆக இருந்தது.

(மணிமணியாக, கொத்துக்கொத்தாக, நிரைநிரையாக)

23. கைப்புச் சுவையுடைய உணவுப் பொருள் _______________.

(மாங்காய், மிளகாய், பாகற்காய்)

24. கண்ணன் தம்பியின் பந்தை _______________ வைத்தான்.

(ஒலித்து, ஒளித்து, ஒழித்து)

25. பழந்தமிழர் பண்பாட்டை விளக்கும் நூல்_______________.

(சிலப்பதிகாரம், தொல்காப்பியம், நாலடியார்)

26. தண்மை என்பதன் சொற்பொருள் ________________.

(வெம்மை, சூடு, குளிர்மை)

27. சோழர்களது கொடி ________________.

(விற்கொடி, மீன்கொடி, புலிக்கொடி)

28. உறவினர்களை அணைத்து வாழும் பண்பு ________________.

(கூட்டுறவு, ஒற்றுமை, சுற்றந்தழால்)

29. மட்பானை என்பதைப் பிரித்து எழுதினால்

________________.

(மட் + பானை, மண் + பானை, மட்டு + பானை)

30. பவளக்கொடியின் துயரத்திற்குக் கரணியம். ________________.

(பேராசை, நிராசை, ஒத்தாசை)

(புள்ளிகள் 30)

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

தமிழர்கள் இயற்கையோடு ஒட்டிய வாழ்க்கையை வாழ்ந்தனர். அதன் அடிப்படையில் நிலங்களை நான்காக வகுத்தனர். அவை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப்பட்டன. காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனப்பட்டது. இம் முல்லை நிலத்தில் எம் மண்ணின் வீரத்துடன் தொடர்புடைய வாகைமரம் காணப்படுகின்றது. தமிழீழத்தின் சிறப்பிற்குரிய பறவை செண்பகம். இது இந்நிலத்திற்குரிய சிறப்பான பறவையாகும். செண்பகம் காவி நிறச் செட்டையும் சிவந்த கண்களும் உடையது. இப்பறவை எந்தச் சூழ்நிலையிலும் தான் வாழ்ந்த மண்ணைவிட்டு வேறிடத்திற்குப் போகாது.

1. எந்தச் சூழ்நிலையிலும் தான் வாழ்ந்த மண்ணை விட்டுப் போகாத பறவை எது?

______________________________

______________________________

2. எம் மண்ணின் வீரத்துடன் தொடர்புடைய மரம் எது?

______________________________

______________________________

3. நானிலங்களின் பெயர்களைத் தருக?

______________________________

______________________________

4. காடும் காடு சார்ந்த இடமும் எது?

______________________________

5. செண்பகத்தின் செட்டையின் நிறம் என்ன?

______________________________

______________________________

(புள்ளிகள் 10)

3) **கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான சொல்லை எழுதுக.**

| | | |
|---|---|---|
| ஏற இறங்க | பென்னம்பெரிய | படபட |
| உயரஉயர | கண்ணுங்கருத்துமாக | |

1. சேரன் ஏற்றிய பட்டம் ______________________ ப் பறந்தது.

2. நாங்கள் எங்கள் கல்வியில் ______________________ இருத்தல் வேண்டும்.

3. நான் காடுகளில் ______________________ மரங்களைக் கண்டேன்.

4. கையும் களவுமாகப் பிடிபட்ட கள்வனின் இதயம்

   ______________________ என அடித்தது.

5. பள்ளிக்கு வந்த புதிய மாணவனை எல்லோரும்

   ______________________ ப் பார்த்தனர்.

(புள்ளிகள் 10)

4) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.

1. காளைகள் ஏன் தமக்குள் பிரிந்தன?

______________________________

______________________________

2. ஒருவன் எப்போது முழு மனிதனாகிறான்?

______________________________

______________________________

3. நல்ல நட்பு எத்தகையது?

______________________________

______________________________

4. தமிழருடைய புத்தாண்டு நாள் எது?

______________________________

______________________________

5. தஞ்சைப் பெருங்கோயிலைக் கட்டுவித்த மன்னன் யார் ?

______________________________

______________________________

6. மன்னாரின் உலகப் புகழ் பெற்ற வணிகப் பொருள் எது?

______________________________

______________________________

7. கடலில் வாழும் உயிரிகள் இரண்டின் பெயர்களைத் தருக.

______________________________

______________________________

(புள்ளிகள் 10)

5) பாடல் வினாக்களுக்கு முழுவிடை தருக.

**நீல வானம் இருண்டது**
**நெடிய மேகம் திரண்டது**
**மேளம் போல இடித்தது**
**மின்னல் வானில் வெடித்தது.**

**சீறிக் காற்றும் எழுந்தது**
**சேர்ந்து மழையும் பொழிந்தது**
**பாறி மரமும் வீழ்ந்தது**
**பாய்ந்து வெள்ளம் வழிந்தது.**

**வரண்ட செடிகள் தழைத்தன**
**வளமும் வாழ்வும் செழித்தன**
**இருண்ட வாழ்வு அகன்றது**
**எல்லோர் மனமும் குளிர்ந்தது.**

1. பாறி விழுந்தது எது?

_______________________________________________

2. எது இருண்டது?

_______________________________________________

3. சீறி எழுந்தது எது?

_______________________________________________

4. எது அகன்றது ?

_______________________________________________

5. வெள்ளம் எப்படி வழிந்தது?

_______________________________________________

(புள்ளிகள் 10)

6) **மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்து கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| சிறந்ததாக | ஓவியம் | மக்களுக்குக் | கண்களுக்கு | நாங்கள் |
|---|---|---|---|---|

இன் கலைகளில் ஒன்று____________________. இக்கலை ________________ விருந்தாக அமைகின்றது. ஓவியங்கள் பல செய்திகளை ____________________ கூறுகின்றன. மொழி தெரியாத இடங்களில் சில அறிவித்தல்களை ஓவியங்கள் மூலம் ____________________ தெரிந்து கொள்கின்றோம். பொது நிலையங்களில் இந்த ஓவிய அறிவிப்புகளைக் காணலாம். உலகப் புகழ் பெற்ற பல ஓவியங்கள் உள்ளன. அவற்றுள் மிகச் ____________________ மோனலிசா ஓவியம் புகழப்படுகின்றது.

(புள்ளிகள் 10)

7. பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

This is my house. There are three rooms in my house. My house number is 10. There is a big park near my house. I go there with my father.

Dit is mijn huis. Er zijn drie kamers in mijn huis. Het nummer van mijn huis is tien. Naast mij huis is een groot park. Ik zal er naartoe gaan met mijn vader.

Dette er huset mitt. Huset mitt har tre rom. Husnummeret mitt er 10. I nærheten av huset mitt er det en stor park. Jeg går til parken med min far.

Dies ist mein Haus. In meinem Haus gibt es drei verschiedene Räume. Unser Haus hat die Nummer 10. In der Nähe von meinem Haus **gibt** es einen großen Park, wo ich mit meinem Vater hingehe.

Det er mit hus. I mit hus er der 3 rum. Mit hus nummer er 10. Ved siden af mit hus er der en stor park. Der går jeg sammen med far.

Questa è la mia casa. A casa mia ci sono tre stanze. La mia casa è al numero 10. Vicino la mia casa c'è un grande giardino. Li' ci vado con mio padre.

C'est ma maison, elle comprend trois chambres. Le numéro de ma porte est le 10. Près de chez moi, il y a un grand parc. Je pars avec mon père à cet endroit.

Det här är mitt hus. I mitt hus finns det tre rum. Mitt portnummer är siffran 10. Bredvid mitt hus finns det en stor park. Dit brukar jag gå med min pappa.

(புள்ளிகள் 05)

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, அறுபது சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. இளங்கோவடிகள்

2. நானிலம்

3. பிறருக்கு உதவுவோம்.

(புள்ளிகள் 15)